அரக்குமாமாளிகையிலேவரிறந்ததுவும்
இத்தனையுஞ்சொல்லி இருந்தாரேயென்தகப்பன்
அப்போவியாசரும் அரசனுடவார்த்தையெல்லாம்
செவிகொடுத்துக்கேட்டுமல்லோ சீக்கிரமாயேதுசொல்வார்
உத்தமியாள்தன்னுடனே ஒன்றாய்ப்பிறந்தவில்லு
கூடப்பிறந்ததொரு கோதண்டமானவில்லு
எடுத்துநிறுத்துமென்று எல்லாருக்கானதிய
பெருவில்வளைத்தவர்க்குப் பெண்ணைத்தருவேனென்று

ஐம்பத்தாறுதேசமுள்ள அரசர்கள்தானறிய
அரசர்கள்தானறிய அறையும்பறைபோனை
அப்போதறிந்திடலாம் ஐவருடசேதி
என்றுமவருரைத்து ஏகிநடந்தாரே
அந்தவுரைகேட்டு அனந்தமாயெழுந்து
கூடப்பிறந்தவொரு கோதண்டமானவில் லு
வந்துவளைத்தவர்க்கு மாலையிட்டுத்தருவேனென்று
வில்லைவளைத்தவர்க்கு மெல்லியைத்தருவேனென்று
ஐம்பத்தாறுதேசத்து அரசர்க்குமாலைதந்தார்
பெண்ணைத்தருவேனென்று பிடித்தார்கள்சின்னத்தொனி
சின்னத்தொனியையல்லோ தேசமெல்லாம் ஊணிவைத்தார்
பாஞ்சாலன்சீமையெல்லாம் பந்தலலங்கரித்தார்
எங்குமலங்கரித்தார் இராசாக்கள்வந்திருக்க
பாஞ்சாலன்சொன்னவொரு பரிவானவார்த்தையினால்
ஐம்பத்தாறுதேசத்துள்ள ராஜரெல்லாம்வந்திருக்க
நாலுபுரத்திலுள்ள ராஜரெல்லாம்வந்தார்கள்
முத்துமுடிதரித்த முடிமன்னரானவரும்
பச்சைமுடிதரித்த பட்டணத்துராசர்களும்
வச்சிரமுடிதரித்த மண்டலத்துராசர்களும்
காசிநாடாண்டவொரு கர்னமகாவீரியரும்
நாலுதிக்கிலுண்டான ராஜரெல்லாம்வந்தார்கள்
அப்பெரியபந்தலிலே அர்ச்சுனரும்நீருமாய்
அன்றொருபார்ப்பானைப் அங்குநீங்கள்வந்தீர்களே
பாஞ்சாலன்தானறியான் பாரளந்தாரானவரை
ஆருமறியாமல் அவரெடுத்தமார்க்கமெல்லாம்
உங்கள்வடிவுதன்னை ஒருவரறியாமல்
அந்தச்சமயத்தில் அடைவுடனேயென்தகப்பன்
வந்திருந்தராசர்களை வளையுமென்றார்வில்லதுவை
எப்பெரியராசர்களும் இவ்வில்வளைக்கறியார்
காண்மைபத்தனையெடுப்பார் கலங்கியேவைத்திடுவார்
ஆராலும்முடியாது அப்பெரியவில்வளைக்க
காசிநாடாண்ட கர்னனெழுந்திருந்து
வில்வளைத்துமல்லோ வில்நாரிபூட்டுகையில்
நான்றுதுமெண்ணினேனே இவனேபுருஷனென்று
வடிவுசிலையுடையான் மாலையிடவேணுமென்று
எண்ணினேனென்மனதில் இனியொன்றுநானறியேன்
வில்லைவளைக்காமல்கர்னன் வில்தெறித்துப்போய்விழுந்தான்
அன்றுமொருபார்ப்பானைப் அருச்சுனர்வில்வளைத்தார்
நீர்பார்த்துமினைத்தார் நித்திலங்குபூமுடியார்
பார்ப்பான்கழுத்திலே பணிமாலைபோடுமென்றார்

குஞ்சுடேசகியானவர்க்கு குடுக்கவுஞ்செய்வேனென்று
சகுநல்லோடமேதனிலே வித்தியோகத்திட்டாள்
கர்னன்கழுத்திலே வைகாமலிவிழாமல்
பார்ப்பான்கழுத்திலே பணியாமலிருக்கத
அப்பாவஞ்செய்கதல்லால் ஆயிரம்பிறன்திலே
அருச்சனர்குமாரனிட்டு ஐவருக்குஞ்செய்வேனென்
பார்த்தருக்குமாலையிட்டு பஞ்சவர்க்குந்தேவியானேன்
மற்றொருபாவங்கள் யாவுமேசெய்ததில்லை

எம்பெருமானுக்குத் திரௌபதை தன்கனியாவார்
சத்தி சரியாய்ச்சொல்ல பாதகனிமரத்திற்
பொருந்தினது.

தேராதவழுதி திரௌபதைபாகம்சொல்லுகையில்
என்றபொழுதிலே எழும்புதுமாங்கனிதான்
பொட்டென்றேவதாவென்டும்பெ பொருந்தனதேமாங்கனிதான்
தருமர்மனக்குளிர்ந்து சந்தோஷமானரே
பஞ்சவர்கள்ஐவரும் பாரமகிழ்ந்தார்கள்

எம்பெருமான் பஞ்சவர்க்குப் புத்திசொல்லித்தான்
அவர்கையில் செல்வபெற்று துவாரகைக்
குப் போகுதல்.

ஐவர்மகிழ்ந்தபின்பு அரிராமரேதுசொல்வார்
பஞ்சவரைத்தானழைத்துப் பாரனைத்தாமேதுசொல்வார்
இந்தவனந்தனிலே இருக்குமிக்காலம்
மற்றொன்றுவந்தாலும் கவலையில்லையென்றார்
பத்திரமாக இருங்களென்றார்பஞ்சவரை
போகச்சொல்லுதாரு மென்றிறபூதரர்புண்ணியரும்
பஞ்சவர்களைவரும் பாஞ்சாலி திரௌபதையும்
ஐவருந்திரௌபதையும் ஆண்டவனைத்தெண்டனிட்டு
போய்வருமெனுஞ்சொன்னார் புகழ்வேந்தரையர்களும்
விடைபெற்றெழுந்தாரே வேதப்பெருமானும்
பட்டமாய்கருடனேறி மாயவனுப்போகலுற்றார்
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுஞ்சோலைதாண்டி அதிகவனந்தாண்டி
வில்லின்றனாரிஞ் செய்யுமவனந்தாண்டி
துவாரகாபுரிதனக்கு சுவாமியும்போனபின்பு
ஐவர்பஞ்சபாண்டவரும் ஆரணங்குதிரௌபதையும்
மன்னர்பஞ்சபாண்டவரும் மாதுசிரோமணியாள்திரௌபதையுமே
ஆரணைதனிலே அரிநாராயணனையேவணங்கினார்
இப்படியாக இருக்கின்றார்பஞ்சவர்கள்

ஐந்தாவது சயிந்தமகாரிஷிவனம் பூர்த்தியற்று.



துரியோதிரன் சித்திரசேனனுடன் சண்டைசெய்து தேர்சக்கரத்தில் கட்டுப்பட்டது.

௩-வது. - ஜயத்ரதனுபர்வம்.

ஆறும்வருஷம் பிறந்ததனுவருக்கு
காந்தவனந்தனைவிட்டு அப்பாலேசேர்ந்தார்கள்
ஆவடைந்திமேலே குவளாம்ஷைகாரனைநந்தில்
கோவிலைநந்திபோத் ஆவடைந்திமேலேவைத்தார்
மனவினைத்தரிபட்டு வனவாசம்போனார்கள்
காந்தவனந்தனைவிட்டு அப்பாலேபோனார்கள்
காமியநுபர்வதத்தை கடிக்கேபுகுந்தார்
காமியநுவனத்திலே கடுகவேசேர்ந்தார்கள்
ஜுக்கிரிகைகுளங்களை அநேகமும்கண்டார்
ஏழுமிக்குமரங்களை எதிர்வரவுங்கண்டார்
அந்தவனத்திலேவர் குடியிருந்தார்
அனேகரொயாய் அவ்வனத்திலேயிருந்தார்
இப்படியாகயிவரிருக்குமவேளையிலே

திரியோதிரன் ஆலோசனை.

தென்னமுடிவேந்தன் திரியோதிரன்தானும்
வணக்கமுடிவேந்தன் மாபாவியென்னசெய்தான்
சபைகளிலேயிருந்தச் சர்ப்பக்கொடியோனுரைப்பான்
காளமகாரிஷியாரை கருத்திதவம்பண்ணி
நுனையுங்கொல்லுமென்று அனுப்பினான்வனத்திலே
கொல்லுகிறேனென்றுசொல்லி கோபமாய்போனாரே
ஐவர்-செத்ததையுமறிந்த தவுஞ் சேதிதெரியவில்லை
ஆடாதுதவமே ஆப்பரமபோவாருமென்றார்
அப்படியேதூதவர்கள் அனேகரும்வந்தார்கள்
திரியோதிரனைக்கண்டு தெண்டனிட்டுமேபணிவார்
என்னையழைத்தபணி ஏதுபணிசொல்லுமென்றார்
அப்போதிரியோதிரன் அவர்களுக்கேதுரைக்கலான்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்போனாரே
எந்தவனத்தில் இருக்கிறாரென்றறிந்து
இன்றுமைக்காமல் ஆராய்ந்துபார்த்துவாருங்கள்
என்றதுசொல்லுமே சீக்கிரங்கொண்டுவாரும்

துரியோதிரன் தூதுவர்கள் பஞ்சவரைக்காணவேதேடி
மாரசக்கிரான்னைதேல்லாம் மல்லாமல்தாண்டிசட்டு
வாரும்கூடதூதுவர்கள் மராசமன்சொற்படிக்கே
அந்திபுரந்தாண்டி அதிசயமாய்வாறார்கள்
குருக்ஷேத்திரபூமிவிட்டு குருபூமிதேசம்விட்டு
காடுஞ்செடிகடந்து கடுகவேவாறார்கள்
இல்லெனறுபூத்ததொரு செடியுமனைத்தாண்டி
குரிபன்னைதனிலே ஜுதரிதையாரத்தார்கள்
அந்தேரமக்காகுமல் அப்பாலேதேடிவாறார்

நாமபோகுவனத்தில் நடக்கென்றுதேடிவாரார்
அங்கேயுங்காணுமே அப்புறந்தேடிவாரார்
மருத்தமகாரிஷிவனத்தில் முடிமேதேடிவாரார்
அங்கேயுந்தேடியே அப்பாலேபோகிறார்
சாமமகாரிஷிவனத்தில் கடுக்கியேதேடிவந்தார்
அங்கேயுங்காணுமல் அப்போதேபோகிறார்
வசிஷ்டமுனிவனத்தில் வடிவிலேதேடிவந்தார்
அங்கேயுங்காணுமல் அப்புறமே டிவாரார்
காமதேனுபர்வதத்தில் கண்டார்கள்பஞ்சவரை
துரௌபதையுங்கண்டவுடன் அங்கேபயந்தொளித்தார்
பஞ்சவர்களைக்காணவும் கண்டுதிரும்பினார்கள்
பாண்டவர்களைநாடியும் கண்டுதிரும்பினார்கள்

துரியோதனனுப்பிய தூதுவர்கள்காமதேனு
வனத்தில் பஞ்சவரைக் கண்டு துரியோ
தனற்குச் சொல்லல்.

கண்டுகொண்ட தூதுவர்கள் கடுகவேதிரும்பினார்
ஆறுகடலைதாண்டி அதிகவனத்தாண்டி
காடுமலைகளுமே எல்லாந்தான்தாண்டி
ஆனந்தமாகவே அஸ்தினபுரத்தில்வந்தார்
துரியோதனனுக்கும் சிங்காசனத்தருகே
மகாராசன்முன்னே வந்துபணிந்தார்கள்
வந்துபணிந்தவர்கள் மன்னருக்கேயுரைப்பார்
துரியோதனராசனுக்கு சேதிசொல்லுகிறார்
துரைமகனேகேளுமே அரசர்பெருமானே
பாண்டவர்களென்றபேர் வனத்திலேகண்டோமே
காமதேனுபர்வதத்தில் கண்டோமேநாம்பஞ்சவரை
அந்தவனத்திலே இவரிருக்கிறார்கள்
பார்த்துப்போக வந்தோமே பஞ்சவர்களையும்
கண்டுபோக வந்தோமே காவலர்களையும்
என்றுமொழிந்தாரவர் வணங்கித்தூதுவர்கள்
துரியனுக்கேசொல்லி சொல்லுவமேனேர்வார்த்தை

துரியோதனன் பஞ்சவர்கள்மேல் சண்டைக்குப்போகச்
சகுனியுடன் ஆலோசனை பண்ணுகிறது.

என்றவுரைகேட்டு எரிசல்கொண்டவனும்
சபைதனிற்கிருக்கச் சர்ப்பக்கொடியோனுரைப்பான்
இவர்வனவாசம்போய் இந்நாளவருமுன்பு
இவ்விதத்தை நன்மைகளை மெத்தமறந்திருப்பார்
ஆனைகுதிரைகளும் அண்டவொண்ணுப்படையுமில்லை
ஆகயினாலேசகுனி இவர்மேல்படையெடுத்தால்
இவ்வரசுக்கொண்டிடலாம் அதமபண்ணிப்போட்டிடலாம்

இதுவேசமயமல்லவா இராசனைக்கொல்லு நன்று
அப்பாலசகுனியேசொல் ஆசைகளைச்சொல்லுமெய்யே

சகுனிதிரிபோதிரனைப் பாண்டவர்களுடன் சண்டைக்குப்
போகச் சொல்லுகிறது.

அப்போசகுனியும் அக்கேயெழுந்துரைப்பான
சொல்லக்கேட்டவிடலன் முக்குசகுனியப்போமான
இதுசமயம் நுசமயம் இவனதுடியைக்கெடுக்கவேண்டு
மருமகனுக்காக வார்த்தைகக்கேடுசொல்வான
வெவ்வாத்தைசொன்னீர்காண் விலக்காகக்கொண்டவமேர
இவர்பிழைத்துப்பின் ஆணிபம்விட்டுவந்தால
தப்பிபிழைத்துவந்தால தர்ம்பஞ்சபாண்டவர்கள்
பங்குநம்பிரகாரம் பாதிவிகேட்பாரே
இப்போபடையெடுத்து இராசனைவெகொண்டுவிடலாம்
கல்லசமயங்காண கைக்குக்கிடைத்தென்று
சென்னமுடிவேந்தன் திரிபோதிரப்பெருமான்
மாமனுரைகேட்டு மகாராசசேதுரைப்பார்

திரிபோதிரன் சண்டைக்குப்போகச் சேனையைத்
திட்டப்படுத்துகிறது.

ஆர்காரும்ராசர்களே அருகிருக்கும்மந்திரிகளே
ஐந்தருக்களுமே ஆயிரஞ்சேனைகளும்
பலபலராஜாக்களும் பக்கலட்சஞ்சேவகரும்
காலாளசேனைகளும் கப்பார்கள்காரியரும்
அத்தண்டசேனைகளும் அடக்கதுப்பயணமென்றார்

திரிபோதிரன் பஞ்சவர்களுடன் சண்டை
பண்ண வருகிறது.

அப்போதுதிரிபோதிரன் அவனுடையசேனைகளும்
பயணம்பயணமென்று பயணசேரிபடியென்றுவ
இன்றவெளிகூடாரம் இயநுடனேபோடுமென்றார்
கட்டுமென்றார்சண்டாளை ககராவுடனேமென்றார்
அக்கேகட்டரண்சண்டாளை அடிமென்றார்பேரிகையை
அடிபடுதாரம்பேரி அணடக்கிடக்கிடென்ன
சண்டைசண்டையென்றசொல்லி சண்டைகைடிபடுத்து
செணக்கணமெணக்கசென்று செணபேரிமடிபடுத்து
ஆனைபின்சேனப்பேரியையும் அசையநின்மேல்டங்காரம்
ஒட்டைபின்சேரிகளப்ததுக ஒருசேவக்குறாக்களும்
தானமொடிகைதனமுக கவிழ்மாளைராணம்
பதினெட்டுவாத்தியமும் பணிலைபுக்தான்முழங்க
அண்டாண்டதானதிர அடிமிருதேமனவைகை
முக்காதமுரம்பட்டும் முரசுமுழங்கவர
காதுகாதுரம்பட்டும் ககனெனவகுழவர

முரசகந்தாளமட்டும் அடிபடுதுபேரிகையும்
ஆனையின்மேலக்கபத்து குதிரையின்மேலட்டங்காவும்
காணநாட்டெடுத்தார்கள் கருப்புகல்லகூடாரம்
வெய்யநாட்டெடுத்தார்கள் வெள்ளைகல்லகூடாரம்
மழைநாட்டெடுத்தார்கள் வர்ணவெள்ளைகூடாரம்
பனிநாட்டெடுத்தார்கள் பட்டுகல்லகூடாரம்
ராநாட்டெடுத்தார்கள் கருப்புகல்லகூடாரம்
குதிரைபோகுமிரை கொக்கரித்தவருகுதங்கிக
பாண்டியநேசர்களும் அண்டவெண்ணராஜாவாழும்
அபாதருஞ்சமரதரும் அதிபதரானவரும
மல்லர்செந்நாய்களும் கன்னடியரானவரும்
மறத்தனமக்களும் இலங்காடிச்சோனகரும்
வேறுபெருமானிபரும் வில்லேவந்தராசர்களும்
தொலுமானர்மல்லாளர் சோனகருமொட்டியரும்
பட்டாங்குஞ்சூரியமும் பரரியவிலசமுதாடு
பேரிகைமேளபேரிகத்தி கிராமைப்பாங்குகளும்
அறிமுமிருப்புகைக்கை ஆயுதவரிசையுடன்
கட்டுமுத்திலேலாயுதம் எடுத்தார்கள் சூலாயுதம்
அத்தவட்டாறுமெழும் அல்லவரும்பயணமென்றார்
அமிர்தரும அமைத்தார்மர் சொல்லரியவீரர்களும்
திருபன்திருபாசாலி சேர்த்துபெற்றகர்ணனுமே
சாமத்துரோகி சகுனியவன்கூட
மாமாசகுனியும் மைத்துனன்சேத்தராசன்
தம்மைகுணவாளன் தநுதல்லபொட்டுமகன்
துக்கானமணவாளன் அறதனியாள்பெற்றபிள்ளை
காந்தாரிபிள்ளைகளும் கவுரவர்சேனைகளும்
கூடப்பெற்றபிள்ளைகளும் கோடியரசர்களும்
ஐவரைக்கொல்லவென்று அநேகம்பேர்பயணமானார்
செத்துமொழும்படுது தெய்வேலாகக்கப்புகுது
சருக்குமெழும்புறுது சக்கேரானைகப்புகுது
கொடிகள்பறக்குது குவலயமெட்டுந்தழ
முடிகள்நிறுத்து மண்ணுமேலாகத்தழைக்க
அச்சமிருக்கிறெண்ண ஆனைநெருங்கேதுரசைய
வணியக்கிரிசகிரதம் மகபானைகோகடைகூடன்
குதிரைகள்கூத்தலுழக் கோடியன்னார்சதுமிட
சந்தைதவிரைச்சலது சமுத்திரகோஷ்டமுடன்
செல்லுமுடனக்கதொகை சொல்லிமுடியாது
வாஜனக்கதொன்றுல் மட்டுமிதங்களில்லை
பஞ்சவரைக்கொல்லவென்று பாதகனும்வாரானே
ஐவரைக்கொல்லவென்று அரும்பாவிவாரானே
அஸ்தினாபுரந்தாண்டி அப்புறம்வருகையிலே

துரியோதனன் பஞ்சவர்கள்மேல் சண்டைக்குவருகிறபோது
துரோணரைச் சகுனம்பார்க்கச் சொன்னது.

தென்னமுடிவேந்தன் துரியோதனராஜன்
துரோணரைப்பார்த்துச் சொல்லுவான் துரியோதனன்
பஞ்சவரைக்கொல்லவென்று பாரவனம்போறோமே
வாருந்துரோணரே வழிநிமித்தம்பாருமென்றான்
ஐவரைக்கொல்லவென்று ஆரணியம்போறோமே
சகுனந்தனைப்பாருமென்றான் ராசமுடியாளும்

துரியனசொற்படி துரோணர் சகுனம்பார்க்கிறது.

எல்லாசகுனங்கள் இன்னதென்றுதோணுது
தென்னமுடிவேந்தன் துரியோதனன்சொற்படி
அரசனுரைப்படிக்கு ஆச்சாரியானவரும்
ராசமுடியாளும் சகுனங்கள்பார்க்கையிலே
எல்லாசகுனங்கள் எதிராகக்காணுது
பொல்லாசகுனம் பொருந்தலானதுக்கு
வலமாடமாச்ச வல்லிப்பல்லிகத்த
கழுதையானிடமாச்ச நரிகள்குறுக்கோச்ச
பாம்புகுறுக்கோச்ச பாப்பானெதிரானான்
சாரைகுறுக்கோச்ச சந்திரமேல்பல்லிசொல்லும்
வேடனெதிரானான் வில்லுமெதிரானான்
வெட்டுப்பிடியென்று கோட்டானுமாலமிடும்
பட்டமரத்திலே பருந்துதைச்சிருந்து
செருப்பெடுத்துக்கூவன்மழை மின்ரிழவுதான்தொடுத்தான்

துரோணாச்சாரியார் துரியோதனனுக்குச் சகுனங்கள்
நலமல்லவென்று சொல்ல துரியன் அவர்
சொல்லைத் தடுக்குறுகிறது.

துரியோதனனுக்குத் துரோணாச்சாரியார்
அப்பா துரியோதனா அரசர்சிகாமணியே
எதிருடைவார்த்தைதனை விராசவேளிக்கேளும்
ஆகாசகுனங்கள் அருகாமிப்பொழுது
பொல்லாசகுனங்கள் பொருந்தினதேயென்னசெய்வோம்
இன்று நாள்போக்கி இன்னொருநாளரசே
சண்டைக்குப்போகவேண்டாம் வாருமென்றழைக்கையிலே
தென்னமுடிவேந்தன் துரியோதனராசன்
அல்லாதனைதான்கேட்டு அரசமன்னனேதுசொல்வான்
சகுனந்தான்பழுதுமுன்போ சதிராசனராசகமே
பொல்லாச்சகுனமென்று போகாமலிருப்பாரோ
ஐவருக்கெல்லாம் அடைக்கலமாயிருக்கும்
பஞ்சவருக்கெல்லாம் பல்லைகோபாலருமிருக்க
இந்தசகுனத்தில் எதோருக்குறையிருக்கு

கடையுங்கடையுமென்று நடைபேரிப்படியுமென்றார்
வைத்துத்தபாண்டவர்கள் மன்றுமின்றுங்கிராமல்
செக்குமொழிப்புருக அரிப்பைகப்பாதுக
கருக்குமொழிப்புருகா கதிரோனைக்காப்புகுது
காசிசெயு காண்டு கரிபாலைநான்காண்டு
ஆருஞ்சேனாதாண்டு அரிகேவலனைக்காண்டு
நூதனாசிங்கினாதனை உயிர்க்குகொம்பிலேயிருக்கும்
கருதனைக்கொரேசுசி கதலியானைக்காண்டு
செங்காயப்புலிகுட்டி நாகவனைக்காண்டு
மல்லையதுதூரம் புல்லவனைக்காண்டு
சூரியவண்ணாநேதனிலே நூறுமக்கொல்லாஞ்சேர்க்கார்கள்
அக்குருகட்டாங்சங்கடமை அடியமென்றார்பேரிகையை
அன்றுமுதலாய்நதா அடுத்தெகொருமற்றுநாள்
மற்றுநாட்காலையிலே வாய்பர்கள் துறைகளெல்லாம்
நாவிவிமனதில் கடந்தார்கள் துறைகளெல்லாம்
சண்டைகைகொட்டுமென்றான் சல்லரியடியென்றான்
அடித்தார்கள்பேரிகையை அடிவானதிடிபோல
அன்றுமுதலாயிருந்து அடுத்தகொருமற்றுநாள்
மற்றுநாட்காலையிலே வருதுதுபாண்டவர்கள்
சாமளாரியமனதில் தங்களுங்கூசேர்ந்தார்கள்
நகைப்பேரியடியுமென்றான் வல்லதின்னமுமுதுமென்றான்
அரசனுக்கன்செரற்படியே அறைந்தார்கள்பேரிகையை
மதிவரிசின்னதக்கொளி உலகேமுந்தானது
அன்றுமுதலாயிருந்து அடுத்தகொருமற்றுநாள்
மற்றுநாட்காலையிலே மன்னர்பயணமிட்டார்
கமக்குரூர்வதந்திர் கங்கைக்கரையிலே
நூவனைக்கொல்லென்று அருமையாய்வருநாகையிலே

தீர்பாதிரன் நூவனையுங் கொல்லவருகிறனை
வம்பெருமாளதிக்கு வந்தவர்க்கெல்லாந்
தாகமுண்டாக்கினது.

நூவருக்கும்வரதனிமே அருக்கமாயிருந்து
கைமோசம்வாதிக்க நாவலர்களபந்சவர்க்கு
பேசங்கன்யாக முழுக்குமுபந்சவர்க்கு
பாவிகெடுத்தாயே பஞ்சவரைக்கொல்லவென்று
தோஷிகெடுத்தாயே தொண்டர்களைக்கொல்லவென்று
எக்காளம்பண்ணாளி வந்பட்டான்பஞ்சவர்க்கு
ஆக்கனிதகதியுமே இறக்கவகைப்பண்ணுகிற
அசதியாய்காம்குருதாக நூவரிமந்திவார்
மறதியுடனிருந்தகல் மாண்டிரோர்பஞ்சவர்கள்
செல்வத்திரவியங்கள் சேர்த்துப்போருக்கு

உள்ளங்கைசெல்விப்பழம் உருகுலைந்துபோகுதே
தோளிற்செபமாலை தொண்டமிழந்துபோகுதே
கையில்செபமாலை கலங்குலைந்துபோகுதே
என்னவுபாயமது செய்கிறோமெம்பெருமாள்
வருகிறராசருக்கும் மாதாகம்கொண்டவர்க்கும்
தண்ணீர்கலசங்கள் தாகவிடாயுண்டபெண்ணுர்
அந்தவராசருக்கும் அயநாசகுலத்துக்குது
நாவுவரட்டுகுது நடுநாக்குலருகுது
அவ்வனத்தில்தீர்த்தங்கள் அவனியுன்னைக்கிடையாது
மாயர்பெருமானும் மலைராமரோதுசெய்தார்
தேவேந்திரனுடைய சுரபியென்னுங்காமதேனு
அப்பசுக்கள் தீர்த்தமுன்னும் அக்குளமொன்றொழிய
தீர்த்தங்களில்லாமற் செய்துவிட்டாரப்போது
அந்தண்டெனங்களும் அலைகம்விடாயாச்சு
தண்ணீர்கலயாகி தனக்குதுபாளையங்கள்
காடைபடைத்துக் களைத்தார் துரைகளெல்லாந்
தூதுவரைத்தானழைத்து திரியோதிரனுரைப்பான்
இந்தவனத்திலே எங்குமநதியிலேயே
எங்குக்குளமிலேயோ யாதெங்கிலுமே தீர்த்தமுன்னை
தேடிப்போருமென்று செப்பியதும்பின்னேன்
அப்படியேயாகுமென்று அந்தவனங்களெல்லாம்
தேடிப்புறப்பட்டார் திரியோதிரன் தூதுவர்கள்
அந்தவனங்களெல்லாம் ஆராய்ந்துபார்த்தார்கள்
காமதேனுதன்குளத்தைக் கண்டார்கள் தீர்த்தமுன்னை
ஓட்டங்கடையுமாய் ஓடிவந்தார் தூதுவர்கள்
திரியோதிரனுக்குச் சேதியுரைத்தார்கள்
அநலமுள்ளதாபத்துக்கும் அலங்காரப்பொய்கைகண்டோம்
வாருங்களென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டார்.

திரியோதிரன்காமதேனுக்குளத்தில்தண்ணீர்
குடிக்க சேனையுந்தானும் வருகிறது.

தென்னமுடிவேந்தன் திரியோதிரன்கேட்டு
நல்லதுவாரேமென்று நடந்தார்கள்சேனையெல்லாம்
வருகிறசேனையிலே வானுலகவிடையரெல்லாம்

தெய்வலோகத்து இடையர் காமதேனுபசுக்களுக்கு
அந்தக்குளத்தில் தண்ணீர்காட்ட வருகிறது.

அந்தச்சமயத்திலே அந்தரத்துவிடையரெல்லாம்
வானுலகவிடையரெல்லாம் மாடுகன்றுதானெழுப்பி
காட்டிலேமேய்கின்ற காமதேனு அத்தனையும்
மேய்த்துக்கொண்டுதிரியே மீட்டுக்குளத்தில்விட்டார்
குளத்திலேயிருந்த குலமெல்லாமேருகி

தண்ணீர்கலங்கியே தரையில்மண்மேல்கிளம்பும்
குளங்கள்கலங்கியல்லோ குளத்தில்மேல்மணக்கிளம்பும்

பசுக்கள் குளங்கலக்கினதை தூதர்சொல்லத் திரி
யோதனன்கேட்டுக்கோபித்து இடையர்
களைக்கொன்று பசுக்களைமடக்கச்
சொல்லுகிறது.

அந்தசமயத்திலே அரவக்கொடியோன்றூதர்
தூதுவர்கள்தான்பார்த்து சொல்லுவாரரசருக்கு
துரையேராசாவே ஆரோதெரியாது
ஆயிரம்இடையர்கள் ஆவுகளைகொண்டுவந்து
விட்டுமேஅக்குளத்தை மிகக்கச்சேறாக்கிவிட்டார்
தண்ணீர்குடிக்கவேகாண உதவாதென்றார்கள்
என்றவுரைகேட்டு எதுசொல்வானரசனுமே
ஆயிரமிடையரையும் அங்கேவெட்டிவிட்டு
அந்தண்டபசுவையெல்லாம் அத்திபுரமோட்டுமென்றான்
இராசனுரைகேட்டு கடந்தாரே தூதுவர்கள்
மாடுகளைத்தானும் மடக்கித்திருப்பினார்கள்
எதிர்த்தஇடையர்களை யாவரையுங்கொன்றுவிட்டார்
சண்டையானவர்தலையைச் சேதித்து அங்கேபோட்டார்

காமதேனு பசுக்களைமேய்க்கவந்த இடையர்களைத்
திரியோதனன் தூதர்கள் கொன்றவர்கள்
போகமற்ற இடையர்கள்போய் தே
வேந்திரனுடன் சொல்லுகிறது.

தப்பிப்பிழைத்தார்கள் நாலுபேர்கோடனுப்பூர்
தேவேந்திரன்றன்னை தெண்டனிட்டாரிடையர்கள்
வந்துபணிந்தவர்கள் வார்த்தைகளைமிசொல்வார்
காமதேனுப்பசுக்களை காலையிலேமேய்த்திருந்தோம்
காட்டிலேமேய்த்துக்கொண்டு கடுக்குளத்தில்விட்டோம்
ஆரோதெரியாது அங்காரமுள்ளமன்னன்
சேனைபரிவாரத் திரளுடன்கூட்டிவந்தான்
மாடுகளைமடக்கிக்கொண்டான் வல்லுயிரைவாங்கிவிட்டான்
அல்லவரையுங்கொன்று அடியார்கள்தப்பிவந்தோம்
என்றவுரைகேட்டு எதுசொல்வானிந்திரனும்
உருட்டினான்கண்ணை உறுமினான்பெரும்புலிபோல்
கண்கள்சிவக்குதே காந்தாளமாகுதே
மீசைதுடிக்குதே மின்கோபமாகுதே
அவ்வலரிகண்கள்ரெண்டும் செவ்வலரிபூத்திடுதே

கீலவிருக்கன்மன்ரெண்டும் நெருப்புத்தணலாய்விடுது
என்றுமில்லாக்கோபம் பிறந்ததுயிந்திரற்கு

தேவேந்திரன் தன்மகனைச்சண்டைக்குப்போகச் சொல்ல சித்திராங்கதன் மாதலியை தேர் கொண்டுவரச் சொன்னது.

என்மகனேசித்திராங்கா இபலானரத்தினமே
மட்டைமடக்கின மன்னவராசனை
பிடித்தபிடியோடே பின்கட்டாய்கட்டிவாராய்
ஆனைசேனைபரிவாரம் அடங்கக்கொன்றழித்து
பிடித்தபிடியோடே கொண்டுவாராய்பெட்டெனவே
கைப்பிடியாய்க்கொண்டு கண்ணெதிரேவந்துநில்லு
இல்லாதேயானால் எதிர்த்துவந்துநில்லாதே
உத்தாரமன்றோ உப்பர்பிரணிந்திரனும்
தேவேந்திரன்மகனாம் சித்திராங்கதராசன்
அவ்வார்த்தைதான்கேட்டு அதிகமாய்ச்சிரித்து
மாதலிதனைத்தானழைத்து மகாரதமெங்கேயென்றான்
தேரையலங்கரித்துச் சீக்கிரங்கொண்டுவா
என்றவுரைகேட்டு எழுந்தானேமாதலியும்
ஆறுவண்டிநூறுசட்டம் அதற்கேற்றத்தக்காலும்
குத்துக்கால்சொப்பனிட்டுக் கொடுங்கைத்திரவோடு
கொடுங்கைதிரவத்துக் கும்பக்கலசம் வைத்து
கும்பகலசமதின்மேல் குடைகவிக்கட்டியுடன்
அங்கெனவேதக்கசில அலங்காரம்பண்ணியே
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்சொப்பனிட்டான்
வாசியைக்குளிப்பாட்டி வாயிற்கடிவாளமிட்டான்
நாலுகால்வண்டயமும் நடுக்கழுத்திற்கொலுசுகளும்
முன்னாலேகட்டிகளும் பின்னாலேகுச்சுகளும்
பக்கத்தில் அங்குவடி பரியவைத்தான்சலங்கை
முதுகின்மேல்சீனிகளும் முன்னேகடிவாளம்
சந்திரபிறைசூரியப்பிறை தரித்தான்குதிரைக்கு
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்தெண்டனிட்டான்

திரியன்மேல் சித்ரசேனன் சண்டைக்குப்போகிறது.

கடுகவெழுந்தானே கட்டழகன்சித்ரசேனன்
தீன்யுநின்கால்களுக்கு நெருஞ்சிப்பூச்சல்லடமாம்
குந்திபிடிங்கால்களுக்கு குன்றிசிப்பூச்சல்லடமாம்
பண்டிபிடிங்கால்களுக்கு மாதுளம்பூச்சல்லடமாம்
துக்கிவைக்குங்கால்களுக்கு தத்திப்பூச்சல்லடமாம்
பில்லைசமுதாடு பிருவிசித்தரஒட்டியாணம்
கட்டியரைதனிலே கருங்கச்சைகங்குவிட்டு
சந்திரகாந்திகட்டிகட்டி தாமரைப்பூக்கங்குவிட்டு
முத்திலுறுமாலை முகத்தழகாகட்டினனே

[illegible]

[illegible]

[illegible]

வில்வித்தைதனைப் பூட்டி விட்டாரிவர்களேணையை
[illegible]
அபயமுதுங் கேவலமதை ஆர்த்தமுடியாது
பாணங்களாலுந் தங்கள் பார்த்தமுடியாது
[illegible]
அரிபன்னிரெண்டுபாணம் செலுத்தமுடியாது
கர்ணன்விடும்பாணம் கணக்குந்தக்கவில்லை
துரோணர்விடும்பாணம் சொல்லிமுடியாது

வீஷ்மாசாரியரும் வேணபாணம்விட்டார்
அசுவத்தாமாவும் அக்கினிபாணம்
சகுனிசயிந்தவனும் சரமெத்தசரம்பொழிந்தார்
அவரவர்கள்விட்டபாணமும் அபரிமிதமில்லை
ஒருவர்க்கொருவர் ஒருகோடிபாணம்விட்டார்
வாயுவாஸ்திரங்களும் வருணாஸ்திரங்களும்
சந்திரஅஸ்திரமும் இந்திரஅஸ்திரமும்
சங்கஞ்சங்கம்போலே சரங்கள்பொழிந்தார்கள்
கண்டசித்திரசேனன் கண்கொள்ளாகோபமுடன்
வில்லின்நாணிபூட்டி விட்டான்நெருப்பாணம்
தன்மேல்விட்டபாணம் தாங்காமலேவிலக்க
பின்னையுங்கோடிசரம் பிரளயமாய்விட்டுவிட்டான்
அத்தனைபேர்விட்டசரமதனையுங்கொள்ளைகொண்டான்
அங்காரசர்தேருடைந்து அவரவர்கள்வில்பரித்து
ஆனையின்மேலிருந்ததுரை அலறியேமண்ணைகவ்வ
ஒட்டைமேலிருந்ததுரை ஓலமிட்டுக்கீழ்விழ
தென்னங்குலைபோலே திருகினான்வேணதலை
கருப்பங்கழியைப்போல் கண்டித்தான்வேணதலை
ஆலைக்கரும்புபோலே அறுத்திட்டான்வேணதலை
பேய்க்காலெறும்புபோல் பிசைந்தெடுத்தான்பாளையத்தை
பனைநுங்குபோலாகப் பருத்தகளிப்பிதுங்க
கண்டச்சதையறிந்து கழுகுக்கிரைபோடுகிறான்
கால்சரியுது இறச்சிவெளியாகுது
குடல்கள்சரியுது குறிப்பாகஅப்பொழுது
செப்பவிலாவெலும்பு தெறிக்கெறிறான்கால்முறியும்
பட்டஜெனங்களென்றால் செப்பமுடியாது
செத்தஜெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
சித்ரசேனன்சண்டையிலே ஜெனங்களறுகுது
அப்பப்பாவென்று அலையுதுபாளையங்கள்
தண்ணீர்தண்ணீரென்று தவிக்குதுபாளையங்கள்
ரத்தாறுமேலோடுது ரணமுண்டங்கொக்கரிக்க
இவ்விதம்பாளையங்களோடாகூடமாச்சுது
துரியோதனராசன் தேரிழந்துநின்றுவிட்டான்

சித்திரசேனன் துரியோதனனைக்கட்டி இழுத்துக்கொண்டு போகிறபோது துரியோதனன் முறையிடுவது.

அங்கத்தலையாக்கி அடித்தான்சித்ரசேனன்
அந்தரவீதியிலே அவனைப்பிடித்துக்கட்டி
பிடித்தபிடியோடே பின்கட்டாய்கட்டினான்
தேர்ச்சக்கரத்தோடே துரியனைப்பிடித்துக்கட்டி
ஊதினான்சங்குநாதம் உம்பர்பிரான்றன்மகனும்

பிரியன்பிடிபடவே திகிலெடுத்தார்சொல்லாம்
ஒருவருடனொருவர் சொல்லாமலோட லுற்றார்
பிரியனைக்கட்டிக்கொண்டு தெய்வலோகம்போறாராம்
அந்தச்சமயத்தில் அரவக்கொடியோனும்
என்றுதமையன் கூறுகிறான் எண்ணிப்புலம்புகிறான்
ஆரோதெரியாது ஆகாசங்கொண்டுபோறான்
எவனோதெரியாது எமலோகங்கொண்டுபோறான்
ஐவர்பஞ்சபாண்டவரை அனர்த்தம்பண்ணிவந்தேனே
எவ்விலைபொருள் இழுத்துப்போறாரென்னசெய்வேனே
கூடவந்தராசாகள் கோடானகோடியுண்டு
பட்டிக்காரராஜாக்கள் வந்தார்கள்வீரியர்கள்
அந்தண்டராஜாக்கள் அல்லவருங்கையைவிட்டார்
கட்டிப்பூத்துக் கைலாசங்கொண்டுபோறார்
ஆர்வந்துகாப்பார்கள் ஆபத்துவேளையிலே
எவர்வந்துகாப்பார்கள் என்சிவன்பிழைக்கப்போ
தருமனைத்தானினைத்தால் தயவுவந்துகாத்திடுவார்
இந்தவனத்திலே யிருக்கிறாரென்றார்கள்
கூவிப்புலம்பினால் குரல்கேட்குந்தருமருக்கு
தம்பியரைத்தானனுப்பி தயவுவைத்துக்காத்திடுவார்
ஐவருமிப்போது அன்புவைத்துக்காத்தாலே
ஐவரைக்கொண்டுதருமர் ஆலோசனைதேடுவோம்
தப்பிப்பிழைத்தோமானால் தருமனைக்கொண்டிடுவோம்
என்றவன்யோசனையாய் என்னசொல்லிப்புலம்புகிறான்
கூவிப்புலம்புகிறான் கொற்றவன்துரியோதனன்
அண்ணாவேயண்ணாவே அழகானதருமலிங்கம்
ஐவர்பஞ்சபாண்டவரே அண்ணாவேநீகேளும்
ஐவரைப்பார்க்கவே அதிகப்பிரியமாய்
காக்கும்படியாக வந்தேன்காண்பஞ்சவரே
காணும்படியாக வந்தேன்காண்காவலரே
எவனோதெரியாது இழுத்துப்போறான் அந்தரமாய்
ஆரோதெரியாது அழைத்துப்போறானந்தரமாய்
கூடப்பிறக்கவில்லையோ கூட்டிப்பாலுண்ணவில்லையோ
தாயாருமவேறானால் தகப்பனுமொன்றல்லோ
மனதுமிரங்கலையோ மகாராஜர்தருமலிங்கம்
தம்பிதனையன்போலே தயவில்லையோஉங்களுக்கு
அநீதமாய்க்கொண்டுபோறான் ஆரோதெரியாது
(என்) ஆவியைக்காத்தாலே அநேகங்கோடிபுண்ணியங்காண்
சாயம்புமேனியனே தயவிலையோஎன்மேலே
என்றுபுலம்பியே இடிபோலகூச்சலிட்டான்
கூவுங்குரல்கேட்டுக் கொப்பெனவேதருமருக்கு
உற்றுற்றுக்கேட்டாராம் உரகதன்வார்த்தையை

துரியோதனன் முறைப்பாட்டைத் தருமர்கேட்டு
அருச்சனனைப்போய்த் துரியோதனனை
அழைத்துவரச்சொன்னது.

தருமனைக்கொண்டால் தம்பியரைத் தானழைத்து
ஆனதொருமன்ன அருச்சுனனீர் கேளும்
பெரியதவம்பெற்ற பேரான அண்ணன்தம்பி
துரியோதனனைத் தேடிப்போர்க்கைக்கண்
ஆரோவொருவன் ஆகாசங்கொண்டுபோறான்
எவ்வென்றுதெரியாது இழுத்துப்போறான் ஆகாசமாய்
பார்த்துமிருக்கோமானால் பாதகமெத்தவரும்
மெத்தவருத்துகிறான் விலவிலத்தவிப்போது
நம்மைவருத்துகிறான் ரட்சிப்பாயென்றுசொல்லி
ஆபத்துவேளையிலே ஆதரித்தால்புண்ணியங்காண்
கர்த்தரித்துக் கைவேரோடேசுட்டு நேராய்
என்றவனைக்கேட்டு ஏதுசொல்வான் வான்விஜயன்
கைகோடிருத்தமையைக் கண்டதானழைத்து
சொல்லவினதரீனை குருடன்மகன் சூதாடி
எத்தனைவதைக்கள் இடறங்செய்தானதான்
கடுகுதிக்கச்செய் பாஞ்சாலியைத்தொள்ளிழுத்தான்
துகிலையுமவலங்கிலிட்டு அரசாளவே தகாமே
அரமனைப்பெண்களையும் அம்பலப்படுத்தினதுதான்
அண்ணன்பெருந்தேவி பாஞ்சாலிவனத்தான்
பாரவனவாசம பரதேசமோட்டினான்
இகப்பிரதேசம் இனித்திரியுமென்றுமே
சாமத்துரோகனுக்கு தயவுநினைப்பமோ ரா
தென்னமுதலேவேந்தன் திர்யோதிராசன்
எத்தனைசாதுர்யம் இடக்கோபேதமிலுன்
கொல்லவேணுமென்றும் கொடும்பாவிதிரியோதிரனை
இன்றிருகேடாகிக் கமுக்கோலங்கடுகோடும்
செத்தாப்பழுதில்லை சிரான அண்ணாவே
என்றவனைக்கேட்டு ஏதுசொல்வார் தருமர்
அவைவர்க்கெல்லாம் அரசியமுமிப்பார்
நன்மைசெய்தவர்க்குச் சர்ப்பக்குணமாகடுமோ
பொல்லாங்குசெய்தவர்க்குப் பேராமெபருமவம்
நன்மைபசிசெப்தவர்க்கு நட்சேத்திரங்களும்
தீமைசெய்தவர்க்குத் தெரியாதிருளாகும்
வருகிறார்சிவன்பாலே மாமனுழியபார்
இக்கணமேசேலவேதி பர்கிவந்துசேருமென்றார்
வரவழைத்தநிதர சென்றுகேட்டுப்பேசுவமே

அருச்சுனன் திரியனையழைக்கப்போவது.

என்றவுரைகேட்டு எழுந்தானருச்சுனனும்
தென்புலிக்கால்களுக்கு செரிந்திப்பூச்சல்லடமாம்
மன்னரிபிக்கால்களுக்கு மாதளைப்பூச்சல்லடமாம்
குக்கிரிபிக்கால்களுக்குக் குரிந்சிப்பூக்கல்லடமாம்
தக்கிலைக்குமாளைக்குத் தத்திப்பூச்சல்லடமாம்
சல்லடக்கவிட்டுமேல்சேலை தட்டிவரிந்துகட்டி
சந்திரகாந்திகட்டகட்ட தாமரைப்பூக்கக்குவிட்டு
சட்டிசமுதாடு எடுத்தான்பெரியகத்தி
சத்திசொருகியச்சேலை கடுகவெழுந்தானே
சிங்காணிவில்லெடுத்து தேர்விஜயன்பயணமானான்
வாராமே அர்ச்சுனனும் வழிபட்டான் அங்கெனவே
நடந்தானே அர்ச்சுனனும் சாரிகைக்குகாதவழி

அருச்சுனனும் சித்திரசேனனும் சண்டைபண்ணுதல்.

அப்போதருச்சுனனும் அதிவேகமாகவல்லோ
அக்கினிபாணமதை அதின்மேல்வாய்தானெடுத்து
வரிவில்லிலேதொடுத்து மார்பாளவாங்கினான்
அக்கினிபாணமது அதிவேகமாய்க்கடுக்கும்
கண்டசேதோசித்ரசேனன் கண்கொள்ளாக்கோபமுடன்
சிவிபெருமளவே சீக்கிரமாய்வந்தெதிர்த்தான்
சண்டைசண்டையென்று சமர்பேரிமுழங்குது
ஒருவர்க்கொருவர் உயுத்தங்களாகுது
ஒருவர்விடுகிறசரங்கள் ஒருவர்விலக்குவாரும்
இருவர்சமமாக எதிர்த்துமேசண்டைபண்ணார்
ஆகாயமுள்ளதெல்லாம் அம்பாலேபந்தலிட்டார்
சூரியனைத்தான்மறைக்கும் சூரவிடும்பாணமெல்லாம்
மாண்டுசாகைபட்டும் கல்லசண்டைபண்ணார்கள்
அருச்சுனன்சண்டைக்கே அண்டர்பிரான்மகனறிந்து

அருச்சுனனும் சித்ரசேனனும் சமாதானமாகி
துரியோதனனை தருமரண்டை
அழைத்துப்போகிறது.

என்னிலும்வல்லவீரன் என்றுமனதிலெண்ணி
இவன்யாரோதெரியாது அண்மையுள்ளசேவகர்காண்
பம்பிசத்தைதாபதித்து மறுத்தல்லோசண்டைசெய்வோம்
என்றல்லோசித்ரசேனன் ஏதுசொல்வானருச்சுனனை
ஆரடாதம்பி அண்மையுள்ளசேவகனே
எவனடாதம்பிநீ எதிர்த்துசண்டை செய்யவந்தாய்
ஊரேதுபேரேது உன்தகப்பன்யாரேது
எவருடையபுத்திரர்நீ எனக்கறியச்சொல்லுமென்றார்
இவ்வார்த்தைகேட்கவே ஏதுசொல்வானருச்சுனனும்

யுத்தகளந்தனிலே வரவின்முறைகேட்பாரோ
படிகளத்திலெயப்பார் கேட்பாரோபாருலகில்
ஆண்பிள்ளையாமானல் அமராடிசெய்யுமென்றார்
உன்தகப்பன்தன்பெயரும் ஊர்பெயருஞ்சொன்னுலே
காணுரைப்பேன்பிற்பாடு சண்டைக்கென்றான்போர்விஜயன்
தேவேந்திரன்மகனும் சித்ரசேனன்தான்கேட்டு
உத்தரவுதான்கேட்டு உச்சாகங்கொண்டவனும்
தேவர்க்கதிபதிதான் தேவேந்திரனென்தகப்பன்
என்றவுரைகேட்டு வதுசொல்வானருச்சுனனும்
அண்ணனென்றறியாமல் அமராடிசெய்தேனே
தமையனென்றறியாமல் சண்டைகள்செய்தேனே
வில்லைத்தரையில்வைத்து விஜயனுமோடிவந்தான்
சாஷ்டாங்கமாகவே சரணமென்றுதெண்டனிட்டான்
முக்கால்வலம்வந்து முன்னொருகால்தெண்டனிட்டான்
அண்ணுவேசரணமென்று அடிபணிந்தானர்ச்சுனனும்
தேவேந்திரன்மகனும் சித்ரசேனனேதுசொல்வான்
ஆர்விட்டுப்பிள்ளை அறியவுரையுமென்றார்
என்னையறியாயோ என்னுடையஅண்ணுவே
என்தாயார்குந்தியம்மாள் என்தகப்பன்தேவேந்திரன்
என்தகப்பன்தேவேந்திரன் எம்பேருருச்சுனன்காண்
என்றவுரைகேட்டு வதுசொல்வான்சித்ரசேனன்
என்-தங்கைக்குப்பிறந்த தன்மையினல்தம்பியரே
கான்விட்டபாணத்தால் தம்பியேநீபிழைத்தீர்
அல்லாதேயாமானல் அமரில்மடிந்திடுவீர்
தப்பிப்பிழைத்தீரே சாமியுடபுண்ணியத்தால்
என்றிவர்களோர்மனதா யிருவருமாவாகி
ஒருவர்க்கொருவர் உறவாடிக்கொண்டார்கள்
எதில்விஜயனப்போது வதுசொல்வானண்ணனுக்கு
தென்னமுடிவேந்தன் துரியோதிராஜன்.
என்னசெய்தானென்று இப்போநீயண்ணுவே
அவன்செய்ததுந்தமெல்லாம் அண்ணுவேநீசொல்லுமென
இவ்வார்த்தைதான்கேட்டு என்னசொல்வான்சித்ரசேனன்
காட்டிலேமேய்ந்ததொரு காமதேனுஅத்தனையும்
பாற்பசுக்கள்தன்னையிக்ப் பாளையடைத்துக்கொண்டான்
ஆயிரமிடையரையும் அடிமையாய்க்கொண்டுவிட்டான்
இவ்வார்த்தைதான்கேட்டு அனுப்பினன்தகப்பன்
கைப்பிடியாய்கொண்டுவர கட்டளையுமிட்டார்கள்
அவர்சொன்னபடியினலே அமராடிசெய்தனங்காண்
இவனுடையசேனைகளை எல்லாம்கொன்றழித்து
கிரணாகனைக்கைப்பிடியாய் கட்டிக்கொண்டுபோறேன்
என்றவுரைகேட்டு என்னசொல்வானருச்சுனனும்

ஆறுவிகொள்ளுவே அடியேனொருவார்த்தை
காயாம்பூமேனியரும் கருமாவிரகண்ணனார்
என்னையனுப்பித்தா இட்டுவாவென்றுசொன்னார்
அன்னையனுப்பினார் இயல்பானதர்மலிங்கம்
அழைத்துவரச்சொன்னாரே அண்ணருமிப்பொழுதே
உன்றனைத்திவ்வாசனத்திருக்கேன் என்றமேதர்மலிங்கம்
கூட்டியனுப்பினார் குறிப்பாகத்தன்னையும்
என்மேல்தயவுவைத்து இவனையனுப்பினான்
தேவேந்திரன்மகனார் சித்ரசேனனுமேசொல்வான்
பாடுபடக்கியே வல்லுயிரைக்கொன்றவனை
கைப்பிடியாய்க்கொண்டுவர கட்டியனுப்பினார்
ஆசையாய்நீசென்றுபோனேன் அருச்சுனனென்னசெய்வேன்
ஆறுதல்கொள்ளுவே அடியேனொருவார்த்தை
அருச்சுனனந்த அழைத்துபோனுமென்றுசொல்லும்
ஐவரைக்குறசொன்னாலே அதிசமனமகிழ்வார்
அல்லாமேபோனால் அழைத்துமேபோனாலே
என்வார்த்தைதனைநீர் இட்டுக்கொண்டுபோனாலே
அன்றுவேகனுக்கு அமராபுரம்வருவேன்
தேவேந்திரபுரத்தைச சிதறவேகொள்ளைகொள்வேன்
ஆடுகளைமாடுகளை அழகானவருகளை
கடையுகடைத்தெருவுங் கருமாரவீதிகளும்
அங்காடிவீதிகளும் அரமனைத்தெருவுகளும்
அத்தனையுங்கொள்ளையிட்டு அதம்பண்ணிப்போட்டிடுவேன்;
என்வார்த்தைதான்கேட்டு இவனைவிடுவிடென்றான்
சித்ரசேனன்கேட்டுச் சிந்தைமகிழ்ந்தவரும்
சந்தோஷப்பட்டவரும் சர்ப்பக்கொடியோனை
கட்டவிழ்த்துவிட்டுவிடுங் காலென்றான்சித்ரசேனன்

சித்திரசேனன் தேவேந்திரனைக்காண்கிறது.

போய்வரேனென்றல்லோ புறப்பட்டான்தேரேறி
அமராபுரிசேர அடைவுடனேதானடந்தான்
தேவேந்திரனுக்கு சித்ரசேனன்தெண்டனிட்டான்
அருச்சுனன்தன்னுடைய அதிசயச்சேதிகளும்
அரவக்கொடிவேந்தன் அகப்பட்டசேதிகளும்
இவ்விருவர்சேதிகளும் இயல்பாகத்தான்கேட்டு
தகப்பனுடனுரைக்கச் சந்தோஷமாகினார்
அந்தச்சமயத்தில் அரவக்கொடியோனும்
திரியோதிரனைத் தேர்விஜயன்கூட்டிவாரான்
அண்ணருக்காக அழைத்துவந்துவிட்டாராம்
அண்ணர்தருமருக்கு அடிபணிந்தான்திரியோதிரன்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கதெண்டனிட்டான்
மன்மகன்தருமராயன் எடுத்தணைத்தான்திரியனையும்

எங்கிருந்துவந்தீரப்பா எனக்கறியச்சொல்லுமென்றார்
அந்தவனகானகத்தில் ஆரணியவாசமென்ன
அந்தரமாகவே ஆர்காணுங்கொண்டுசென்றார்

திரியோதிரன் தருமருக்குவரலாறுகூறல்.

திரியோதிராசன் சொல்லத்தொடங்கினான்
ஆசையாய்ப்பாசமதாலன்றோயெபார்க்கவந்தேன்
எத்தனைகாலங்காடுறைக்கிட்டுப்போகவேணுமென்று
அஸ்தினாபுரத்துக் கழைத்துக்கொண்டுபோவோமென்று
என்றுதுமெண்ணினேனே இக்காடுதேடிவந்தேன்
என்னை ஆரோதெரியாது அந்தரமாய்க்கட்டிப்போனான்
அபயமபயமென்று அழுதுபுலம்புகையில்
அருச்சுனன்தானுமங்கே அமர்செய்துவிட்டுவந்தான்
எத்தனைநாள்காடுறைவீர் இயலானராஜாவே
பாரவனவாசம் பரதேசந்திரிவானேன்
வேடரைப்போலாக வில்லியரைப்போலாக
பரதேசந்திரிவானேன் பட்டணத்தில்வாருமென்றான்
அஸ்தினாபுரந்தனை ஆண்டிடுவீர்வாருமென்றான்
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வார்தருமராயர்
ஆறுவருஷமாச்சு ஆரணியவாசமதாங்கள்
இன்னுஞ்சிலகாலம் இப்படியேகானந்திரிந்து
பன்னிரண்டுவருஷம் பாரவனந்திரிந்து
வந்தபிறகு மனதுவைத்துதன்மேலே
சொன்னபடிசெய்வை அரைத்தனைத்தாருமென்றார்

வீமன்கனிபறிக்கவர திரியோதிரன்புசித்து தருமரிடத்திற்
செலவுபெற்று அஸ்தினாபுரஞ்செல்லுகிறது.

வெற்றிமதயானை வீமாமதகரியே
அண்ணர்க்கினியாக அதிகபசியானார்
காடெல்லாந்தான்திரிந்து கனிபறித்துவாருமென்றார்
வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
அறுநெல்லிச்சிறுநெல்லி அழகானதமரத்தையுடன்
காட்டுநாரப்பழமும் கருநெல்லிப்பழங்களுடன்
வேரிற்பழுத்திருக்கும் வெடித்தபலாப்பழமும்
மலைத்தேன்சுனைதனிலும் மாங்கனியுந்தேங்கனியும்
மட்டிலாப்பழம்பறித்து மகவீமன்கொண்டுவந்தான்
தேக்கிலைதான்பறித்து திறல்வீமன்கொண்டுவந்தான்
பறித்தகனியெல்லாம் பசியாறவுண்ணுமென்று
கைக்குச்சலங்கொடுத்து கட்டழகருண்ணுமென்று
ஆசனந்தான்போட்டு அமுதுபுசியுமென்று
விசுவாசங்கொண்டவனும் வேந்தனுந்தான்புசித்தான்
என்றுதுமெண்ணுகிறான் எதிராகங்கொண்டவனும்
இப்படிக்கொத்த இயல்ராசபஞ்சவர்கள்

பாபமடைக்குச்சாவார்கள் இக்கனியைத்தின்றவர்கள்
அந்திருப்பாதத்திற்போய் ஆலோசனைபண்ணவேண்டும்
எப்படியுமுபாயசனரா இக்காட்டிற்கொல்லவேணும்
என்றுமனதிலெண்ணி இருந்தகனிபுசித்தான்
பிராசவண்டனே பாதகன்றிரியோதிரன்
கைதூக்கிகொண்டானே காதகன்றிரியோதிரனும்
காளம்புயன்னவனும் தருமர்பெருமானும்
பின்னுமந்தக்கனியை பெருமூட்டையாகக்கட்டி
அப்போதிரியோதனு அழகானக்கனியை
அரண்மனைக்குக்கொண்டுபோய் அனைவருந்தான்புசிக்க
எடுத்துப்போமென்றுசொல்லி சந்தாரேயக்கனியை
வாசலிலேயக்கனியை மன்னனுந்தோளிலிட்டான்
தூபலேபோவாரேனென் றடிபணிந்துதெண்டனிட்டார்
சாலயம்புயன்னவனும் தர்மனிக்கமேதுசொல்வார்
காலைபபஅர்ச்சனரே கடுக்கெழுந்திருந்து
அண்ணன்றிரியன்முன் னக்கனியின்மூட்டைகொண்டு
காடுகடக்கவும் கைமூட்டைவாங்கி
அண்ணனைவழிகூட்ட அனுப்பிவாதம்பியென்றார்
தருமருகைக்காட்டி தார்விசயன்தானெழுந்து
கனிமூட்டைதோளில்வைத்து அடிக்கிபின்னடந்தான்
திரியோதிரன்பின்னே நடந்தானேதேர்விசயன்
காடுசெடியுங் கடியவனத்திரமும்
ஆறுகுளமும் அண்ணன்முன்தான்கடந்து
காடுகடந்தபின்பு கைமூட்டைவாங்கிக்கொண்டு
தென்னமுடிவேந்தன் திரியோதிரனேதுசொல்வான்
ஊரினுமர்ச்சனரே தொல்லுலகில்வாராதே
கூடக்கின்றனச்சனரே காசினியில்வாராதே
கரமெறிந்தகாலன் காடுமிதியாதே
அரமனைப்போதையிலே அறுதெரிவேனுன்தலையை
தருமர்பெருமையினால் தணிந்துவிட்டேன்கோபத்தை
மன்னன்றிரியனசொல்லி இசைந்துவழிநடந்தான்
அண்ணனருகாக அருச்சுனன்வந்தழுதான்.
அப்போதிரியோதிரன் அதிகவிரைவாக
காடுசெடியுங் கரியமலைகடந்து
அந்திருபுரத்துக்கு ஆணழகன்போயடுத்தான்
கொலுதனத்திற் சென்றானேதிரியோதிரன்
துசாதனவரையும் அனந்தமகாராஜரையும்
மாமன்சகுனியும் மைத்துனன்சயிந்தனும்
அத்தனைபேரையும் அழைத்தான்திரியோதிரன்
கொண்டுவந்தகாய்கனியைக் கொப்பெனவேமுன்னேவைத்தான்
இக்கனியையுண்டவ ரெப்படிகாண்மாண்டிடுவார்

தேவேந்திரன்மகனர் சித்திரசேனனென்னைப்பிடித்தார்
தேரிலெனைக்கட்டி தெய்வலோகங்கொண்டுசென்றார்
அபயமபயமென்று அழுதுபுலம்புகையில்
அர்ச்சுனன்வந்து அமராசெய்தான்காண்
என்னைவிடுவித்து இட்டுவந்தானண்ணனண்டை
இவரையுங்கண்டேனே அநேகமானவார்த்தைகளை
உசிதமாகவேதா னொற்றுமையாய்வார்த்தைசொன்னேன்
இந்தகவிதான்படிக்கும் எழிலானபஞ்சவர்கள்
என்றிவர்கள்தான்பேசி யிருந்தார்சிலவார்த்தை
எப்படிக்குமாண்டுடிவார் இபலானபஞ்சவர்கள்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
ஆறும்வருஷம் முடிந்ததுஐவருக்கு

ஆறுவது காமதேனுபர்வதம் முற்றிற்று.

ஏ-வது, கெந்தர்வபர்வதம்.

ஏழாம்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோனார்கள்
கூடைதலைமேலே குடிவாழ்க்கைகானகத்தில்
கோடிவைத்தசீமாடு கூடைதலைமேலேவைத்தார்
மன்னிவைத்தசீமாடு வனவாசம்போனார்கள்
காமதேனுபர்வதத்தைக் கடந்துவழிகூடி
அந்தவனத்தைவிட்டு அப்பாலேபோனார்கள்
கெந்தர்வபருவதத்தில் வந்தாரேபஞ்சவர்கள்
ஐந்திருக்குப்பர்ணசாலை அழகாகவுண்டுபண்ணார்
எழுக்குப்பர்ணசாலை எழிலாகவுண்டுபண்ணார்
அந்தவனத்திலே ஐவர்குடியிருந்தார்
இப்படியாகவே இவரிருக்கும்வேளையிலே
அங்கேபெருமானும் அலைகங்கைஸ்நானம்பண்ணி
ஈரமுலர்த்தி இழைசேர்த்தபட்டுடுத்தி
சாம்பமூர்த்திபூசைகளும் சகலமுந்தான்முடித்து
ஆசனமிட்டுமெல்லோ அரிராமர்பூசைபண்ணார்
அரிபூசைகுருபூசை அனைத்துங்கடன்முடித்து
கைதனிலேதீர்த்தமள்ளிக் கதிரோனைப்பூசித்து
எரிக்குங்கதிரோனை எம்பெருமான்தோத்தரித்து
கண்ணிரண்டுமூடியே கையிரண்டுமேந்திக்கொண்டு
மெய்ஞானமாகவே ஸ்ரீகிருஷ்ணன்தானிருந்தார்

எம்பெருமான செபம்பண்ணும் வேளையில் கெந்தருவன்
தம்பலம் உமிழ பெருமான்கோபிக்கிறது.

ஆகாயவீதியிலே அழகானகெந்தருவன்
மாவெனெனும்கெந்தருவன் வாரானேதேரேறி
தேரேறிவருகையிலே தின்றுதுமிழ்ந்தானே
வாய்நிறைவெற்றிலை வாசமுள்ளதாம்பூலதிரி



பெருமாள் சக்கரத்துக்குப்பயந்து கெந்தருவன் அருச்சுனனிடத்தில் அபயமடைதல், பெருமாள் | திரியோதிரனுடன் கலந்து அர்ச்சுனனிடம் போர்செய்தல்.

வெத்திலையும்பாக்குகளு மென்றுவுமிழ்க்கேனே
மாயவனார்கைதனிலே வழுக்கிவிழுந்தது
துப்பியதம்பலமும் துழாய்மவுலிகையில்விழ
கண்திறந்துபார்த்தாரே கைதனிலேதம்பலத்தை
சுற்றிப்பக்கேபார்த்தாரே தோணவில்லைவேறொருவர்
ஆகாயவீதியிலே அவனுமோதெரியாது
கைதனிலேதம்பலத்தைக் காரியுமிழ்ந்தானே
செபதபஞ்செய்கையிலே செய்ததிவன்கெருவமென்ன
கண்கள்சிவந்தாராம் காங்காளமானாராம்
அல்லலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரியாச்சுது
நீலவிழிக்கண்கள்ரெண்டும் நெருப்பத்தணலாச்சு
கோவைப்பழம்போல கூர்விழிகண்சிவக்கும்
பாவற்பழம்போலப் பத்தினியேகண்சிவக்கும்
சக்கரத்தைதானெடுத்து சாமிபெருமாளும்
கொல்லநினைவுகொண்டார் கோபாலஸ்ரீபெருமாள்
மந்திரஜபமிட்டு வலதுகையில்தானெடுத்தார்
தம்பலமுமிழ்ந்தவன்றன் தலையைநீவாங்கிவா
அரைக்ஷணப்போதையிலே அறுத்துவாயவன்றலையை
அரனார்வந்தெதிர்த்தாலும் அமரர்வந்தெதிர்த்தாலும்
பிரமதேவன்வந்தாலும் பிரியங்கள்சொன்னாலும்
தேவிரான்வந்தாலுந் தெண்டனிட்டுக்கொண்டாலும்
கர்த்தரேவந்து கையமர்த்திக்கொண்டாலும்
முப்பத்துமுக்கோடி முனிவர்தடுத்தாலும்
ஆரார்தடுத்தாலும் ஆலாரம்பண்ணாலும்
அரைநாழிகைக்குள்ளாக அறுத்துயவன்தலையை
இக்கணமேசென்றுநீ இருதுண்டப்போட்டிடுவாய்

மாயன் கெந்தருவன்மேல்கோபித்து சக்கரத்தை
அனுப்புகிறது.

சக்கரத்தை ஜபமிட்டு சாமியவர்விட்டுவிட்டார்
வருகுதுசக்கரந்தான் வானுலகந்தான்தேடி
இயல்பாய்வழிதனிலே எதிர்பட்டார்நாரதரும்
நாரதமாமுனிதான் நமஸ்கரித்தார்சக்கரத்தை
இத்தினகோபத்துடன் எங்குநீர்போறீர்காண்
ஸ்ரீராமர்சக்கரந்தான் அம்முனிக்குயேதுசொல்லும்

நாரதர் சக்கரத்தை நீர்போகிறகாரியமென்ன
என்றதினவ சக்கரஞ்சொல்லுதல்.

ஸ்ரீராமஸ்ரீப்பெருமாள் செபதபஞ்செய்கையிலே
வாசங்கள்தானின்று வலதுகையில்துப்பினதே
ஆசையாய்சாமியார் அப்போதுகோபமானார்
என்னையனுப்பினார் இவன்தலையறுக்கவந்தேன்
கெந்தருவன்றன்றலையை முந்த அறுக்கவந்தேன்

அவ்வார்த்தைதனைக்கேட்டு அக்கிரமிப்போய்க்கொடுத்தார்
கெந்தருவன்தன்னாலே வந்தவிநோதருமே
ஆரடாகெந்தருவா ஆயுதவர்மேலில்
தப்பமுடிந்திருந்திலை சாமியவர்கோபமுடன்
சக்கரமதுகைப்பெடுத்தனை தலையைத்தறிக்கவென்று
வருதுசக்கரமதனை பாரென்றிப்பார்க்கச்சே
ஆதிசிவனாருடைய அபயமிட்டுப்போகுமால்
பரமசிவனார்த்தும் பட்சமில்லைதாராமாறும்
ஆதிசிவன்றன்னுடைய ஆருமிடமைக்காக்க
அன்னைகேகையானாலே அருச்சுனரிடமுன்தன்னை
தப்பிவிடைசொன்னாலது தவமுடிவிசொல்லுமைப்பில்
அவ்வார்த்தைதான்கேட்டு அதிசயமாகதவமும்

கெந்தருவன் சக்கரத்துக்கஞ்சி மும்மூர்த்திகளண்டைபோய் முறையிட்டுத் திரும்பவும் அருச்சுனனண்டை போகிறது.

மாய்போகைகழவே வழிபிடித்தான்கெந்தருவன்
சக்கரம்வரதைகண்டு தான்புலம்பித்திகிறான்
ஆதிசிவனை யல் அபயமிட்டுக்கிறான்
அரவாபரணனே ஐயா உனக்கபயம்
சங்கரகோன்சரணம் சதாசிவா உனக்கபயம்
சந்திரசேகரசரணம் தயாநிதிவா உனக்கபயம்
பொன்னிறத்தேகமுடைய வித்தகக்கோன்சரணம்
மாதுமையைத்தரித்த மகாதேவா உனக்கபயம்
முருகன்தனையீன்ற முதல்வனே உனக்கபயம்
திரிபுரமெரித்தவெங்கள் தேவா உனக்கபயம்
காமனைக்கண்ணாலெரித்த கடவுளேநாதன்சரணம்
காலனையுதைத்தவீர மகாதேவ உனக்கபயம்
கங்கையணிந்தோனே கலைக்கைத்தரித்தோனே
திங்களைதன்சிரசில் தரித்தசிவனோதேர
அபயமபயமையா அகிலமோவுனக்கபயம்
அபயக்குரல்கேட்டு ஆதிசிவனுஞ்சொல்வார்
ஆரடாகெந்தருவா அபயமிட்டவாரேது
அருச்சுனன்கையிலே அழுதுபுலம்பிவந்தாய்
மந்தமதியானவன் வார்த்தையுரையுமென்றார்
ஆண்டவனேயென்சாமி அடியேபணிந்தனப்பம்
ஆகாயவீதியிலே அழகுரதமேறிவந்தேன்
ஐயாரக்காய்த்ததொரு கமுகினதுபாக்கை
வாயாரத்தின்றுதான் மண்மேலே துப்பினேன்
தாமரைப்பொய்கையிலே சாமிபெருமானும்
தினகரனைத்தான்பார்த்து செபதபஞ்செய்தாராம்
காறுமிழ்ந்ததப்பலம் சாமர்கைமேற்றான்விழவே

கோபாலசுவாமியார் கோபம்பெரிதாகி
சக்கரத்தையனுப்பினார் தலையைத்தரிக்கவென்று
என்னைக்கொல்லவருகுது இப்போசக்கரந்தான்
ஆகையாலாண்டவனே ஆதரிப்பீரென்றுவந்தேன்
என்னைரட்சித்தருளும் ஈசனேயப்பனென்றான்
சாக்கடலுனக்கு கார்வண்ணன்மைத்துனனே
இவ்வார்த்தைதான்கேட்டு சிவனாருமேதுசொல்வார்
நான்வேறல்லவென்று நானிலத்திலெங்கருவா
ஆயருக்குப்பகையாகி அருமேவராலாமோ
உன்னைநான்காத்தக்கால் உலகளந்தோனென்னைச்சொல்வார்
கார்வண்ணருக்கதுர்க்கு கூடிப்பகையாவார்
காக்கமுடியாது கடக்கவேபோய்விடுங்காண்
பிரமதேவன்தன்னருகே போனீரேயாமானால்
அவராலேயாகுங்காண் ஆதரிக்கவல்லவரான்
என்றுரைத்தாமே எனவேயாரப்போது
அழுதுபுலம்பியே அப்புறம்போய்ப்புகுந்தான்
பிரமலோகந்தான்புகுந்து பிரமாஅருகிலேநின்றான்
அபயமபயமையா ஆதரிக்குங்கர்த்தாவே
என்னையேயாதரியும் என்றுசொல்லித்தெண்டனிட்டான்
ஆரென்னைப்பார்த்தெழுதும் அப்பிரமதேவன்சொல்வார்
ஆருக்குப்பகையாகி அழுதுபுலம்பிவந்தாய்
வந்தகருமங்கள் வாய்திறந்துசொல்லுமென்றார்
ஆண்டவனேயுபாவே அயனுமேரசீர்மேனும்
ஆகாயவீதியிலே அழகாகமேதின்ந்தேன்
அடைக்காயும்வெற்றிலையும் ஓபாநான்வென்றுநின்று
வாசங்கள்நின்றநான் மண்மேலேநடப்பினேன்
மாயவனார்கைத்தலத்தில் வந்துவீழ்ந்ததுகாண்
மாயன்வெகுகோபமாகி வரவிட்டார்சக்கரத்தை
என்னையேகொல்லுதற்கு இப்போயனுப்பினார்
ஆகையாலாண்டவனே ஆதரிப்பீரென்றுவந்தேன்
ரக்ஷிப்பாதரியும் என்றுசொல்லியடிபணிந்தான்
இவ்வார்த்தைதான்கேட்டு யாதுசொல்வான்நான்முகனும்
நான்வேறல்லவென்று நானிலத்திலெங்கருவா
மாயருக்குப்பகையாகி வந்தாயோபாதகனே
உன்னையீப்போதாதரித்தால் உலகளந்தோனெனக்கும்
பொல்லாப்புகோபமாயிடும் பெரும்பாவியாகனுக்கு
உன்னையிப்போதரிக்க உதவாதுபாதகனுக்கு
யமபுரமேகிடு யமனுடனுரைத்தால்
சக்கிரத்தானாலும் யமனென்னைக்காத்திடுவான்
கட்டுடனேயென்று கைவிட்டார்பிரமதேவன்
அழுதுபுலம்பியே அதிவிரைவாய்த்தானவரான்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
அப்போது பெருவான் அவ நகசெபித்துரைப்பான்
அந்தரமைக்கத்தில் அழகுதாசிமயிலைபோன்
காசவன் தின்றாரன் மணம்பேசெப்பெதான்
மாதன்பூவ அதைப்ப பைய ருடைத்த தனத்தில்
ஆனைபோல்லிகாத்து அனுப்பினர்சகாதேவ
வன்னக்கூறத்தானக மாதிரியை த்துமிகனமுடனே
எண்ணப்படாதிரு மென்முகோமெத்தருவன்
மாயானுக்கொட்டுமென்ன கடிதெழுதினமைப்பான்
மாய ருச்சுபரைப்பானும் மனைவிபார்க்கலாமோ
பார்த்திருக்கும் அதைத மன்னவர்செய்திடும்வன
உன்னைப்போலுருதனமே உசைவாந்தார்கோபமுடனும்
எதிர்த்தனர்யுறப்பட்டான் எதிர்த்தப்போயேற்று
காக்கும்டியாது கட்டுக்காகெத்தருவா
அமராபுரியாளும் அழகானதெய்வபிரான்
தேவேந்திரனுடன் சென்றுசேர்ப்பாவிராவல்
[illegible]
அவ்வாறதைத்துட்டுமென அழுதபுலம்பினான்
தெய்வலோகந்தனிலே தேவேந்திரனும்
அப்பபிட்டு அப்பனிதான் அனமொழுக்கெத்தருவன்
ஆகடாநம்பி அடியனையுமிடக்ன்றன்
ஆண்டவனேயுனக்கு அடிமேலிருந்தார்ந்தை
துரியோதனனைக் அழகதாம்யோதன்
வெற்றிலைப்பாக்கும் வால்மிளகுசாதிபத்திரி
சாதிக்காய்லவங்கசி சன்னலையுக்கமுடன்
வாங்கின்தின்றான் மண்மேலேசுதித்திடாமல்
வாதனின்பூத்தாம் பாமனுராசைதனிலே
ஆசைப்பெருமைமிகுபர் அப்பளமேல்கோபமாகி
சகாதேவரையுமப்பிசெய்தல் தமையத்தரியுமனை
வருந்துசக்காத்தாள வல்லிசொலாக்கவொன்று
கொலலவருந்து கொப்பெனவேசக்கரத்தான்
ஆதரித்தெல்லோக்கு அனைகளெல்காயுமோட்சமுண்டு
என்றதுமாதரகேட்டு மதிசொல்வாரிந்திரரும்
பாயருக்குப்பணையாதி கர்த்தவினை ஆதரித்தால்
எதிர்த்துதாரியமானும் எதிர்த்தப்போயேறேனே
மாயனுக்குச்சபானூர் வையகத்திலாருமில்லை
உன்னையேயாதர்க்க உலகத்தில்பாருமில்லை
கருமருட்டதம்பமன் தார்விழுபனருச்சனன்தான்

அருச்சுனனாலன்றி ஆதரிக்கவேமுடியும்
அபயக்குரல்கேட்டு ஆதரிப்பான்வாள்விஜயன்
ஆதிசிவனான அயனுமவர்களாலும்
ஏழுதம்பிரமாவும் மாயபெருமாள்வந்தாலும்
முப்பத்துமுக்கோடி முனிவர்கள்வந்தாலும்
ஆர்வந்தெதிர்த்தாலும் ஆரவாரபண்ணாலும்
அருச்சுனராசனவன் அஞ்சேலாவென்றிடுவான்
வாசவசபனருச்சுனனும் வல்லமையுள்ளவன்காண்
அருச்சுனனிடஞ்சோர்ந்து அபயமிட்டுப்போனீரானால்
ஆதரிப்பானவ்விசைய னதிவரையிற்போய்ச்சேரும்
என்றவுரைகேட்டு எழுந்தானேகெந்தருவன்
அழுதுபுலம்பியே அருச்சுனனைத்தேடிவாரான்
தெய்வலோகந்தான்டி தேர்விஜயனைத்தேடி
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய் அலறியேயோடிவாரான்
அபயமபயமென்று அருச்சுனன்முன்னேவந்தான்

அருச்சுனன்கெந்தருவனுக்கு அபயங்கொடுத்தது.

அபயக்குரல்கேட்டு அருச்சுனனேதுரைப்பான்
ஆரடாகெந்தருவா அழுதுபுலம்புவானேன்
ஆரெதிர்த்துவந்தாலும் அமராடுசெய்திடுவேன்
அந்தரதேவதைகள் ஐயன்பிடாரிகளும்
ஆகாயவாணியொன்றுக்கு மாதானறிய
காக்கிறேனஞ்சாதே யென்றல்லோகைகொடுத்தான்
அருச்சுனன்கைகொடுத்து அஞ்சாதேயென்றுசொல்ல
சற்றேபயந்தெளிந்தான் அப்போதுயேதுசொல்வான்
அருச்சுனராசனவன் அப்போதுயேதுசொல்வான்
ஆர்க்குபயந்தயோ அழுதுபுலம்பிவந்தாய்
யாரெதிர்த்தாருன்னோடே இங்கழுதுநீவந்தாய்
வந்தகாரியமென்ன வாய்திறந்துசொல்லுமென்றான்
அந்தப்பயத்தவனும் அருச்சுனனோடுரைப்பான்
ஆகாயவீதியிலே அழகுரதமேறிவந்தேன்
வாசங்களுடனவன் மணமேலேதுப்பினேன்
நானுமிழ்ந்ததம்பலந்தான் ராமர்கையில்விழுந்ததாம்
ஆகையால்மாயவரும் அப்போவெகுகோபமுடன்
என்னைக்கொல்லவென்று எடுத்துவிட்டார்சக்கரத்தை
சங்காரம்பண்ணுவனுன் தலையைத்தறிக்கவென்று
ஆதிசிவனிடத்தில் அபயமிட்டுப்போனேனையா
தன்னாலேயாகாதென் றல்லோதள்ளிவிட்டார்
அயன்பிரமதேவனிடம் அபயமிட்டுப்போனேனையா
ஆதரிப்பாரென்றுநான் அபயமிட்டுப்போய்ச்சேர்ந்தேன்
என்னாலேயாகாதென் றல்லோதள்ளிவிட்டார்
யமதர்மராசனிடம் எதிர்கொண்டபயமிட்டேன்

தன்னாலேயாகாது என்றல்லோ தள்ளிவிட்டார்
தேவேந்திரனருகில் சென்றுமுறையிட்டேன்
காருதிவோனென்றுநான் கடும்பயமிட்டேன்
என்னாலேயாகாது என்றல்லோ தள்ளிவிட்டார்
அறிவில்லிருந்தவனே அருச்சுனனேயும்மைநாடி
தேடியேஅபயமிட்டு தெய்வலோகம்விட்டுவந்தேன்
அதீத்திரமானான் அவனவருக்குங்கீர்த்தியுண்டு
இவ்வார்த்தைதான்கேட்டு எழில்விசையனருச்சுனனும்
என்றுநமையண்டுகிற தென்னிமனக்குன்றுகிறான்
மாயருக்குப்பாலகனாகி வந்தவனைக்காத்தாலே
ஆயருக்குமெந்தனுக்கும் அடுத்தாற்பகையாமே
என்னசெய்யப்போறேனென்று ஏங்கிவிசாரமிட்டார்
இவர்சகாயமல்லவா ஆயர்பெருமானும்
பெரியோனென்றுவைத்து ரட்சிக்கவேணுமல்லால்
ஏகவிட்டேனென்றுசொல்லி கைவிடலாகாது
ஆயர்பெருமானுக்கு அன்பாகவார்த்தைசொல்லி
எக்காலத்திலேயும் இவனைக்காக்கவேணும்
ஆலிலேவன்றுகோபமிட்டால் அமராதுசெய்திடுவோம்
என்றுநினைத்தவனும் என்னசொல்வான்வாள்விசையன்
திங்களுஞ்சூரியனும் தெற்குவடக்கானாலும்
அழகானதாமரையும் அடியிலேபூத்தாலும்
நக்கிபிரிந்தவனை நரகத்திலேபோட்டாலும்
நாவாலேசொன்னசொல் நான்தவறப்போறதில்லை
எக்காலத்திலேயும் இடர்கற்றிகாத்திடுவேன்
என்றல்லோவாதிட்டான் இயலானவாள்விசயன்

அருச்சுனன் கெந்தருவனுக்கு பயந்தீர்க்க பெருமானுக்கு கோவம்வந்து சக்கரத்தை யனுப்புகிறது.

அதுகிறசக்கரத்தான் மண்ணுலும்விண்ணுங்கொள்ளாமற்
கண்கள்பொறிபறக்கக் கடுகிவருகிறதை
அருச்சுனராசாண்டை அருகேவந்துதெண்டனிட
என்னகாரியமேன் எங்குவந்தீர்சக்கரமே
வந்தகருமமெந்த வாய்திறந்துசொல்லுமெனறான்
சாமியனுப்பிவைத்த சக்கரமேதுசொல்லும்
மாயனுக்குப்பாலகனான மாபாவிகெந்தருவன்
அருச்சுனனேயுன்னிடத்தில் வந்தானரும்பாவி
அவனைக்கூட்டித்தருக்க அனுப்பினார்மாயவனார்
ஆகையாலனுப்புங்காண் அருச்சுனனேயவன்தலையை
அறுத்தெரிந்துயான்போறேன் அவனையனுப்புமென
தனஞ்செயனுமப்போது சக்கரத்துக்கேதுசொல்வான்

பாரளந்தாரானவற்குப் பகையாளுமென்றறியேன்
அபயமபயமென்று ஆதரித்தருளவேணும்
காக்கிறோமென்றுசொல்லி கைவிடலாகாது
ஆகையால்சக்கரமே ஆயருக்குச்சேதிசொல்லும்
கோடிசரணம்நான் கும்பிட்டேனென்றுசொல்லும்
ஆயிரந்தெண்டனிட்டு அடிபணிந்தேனென்றுசொல்லும்
சக்கரத்தாழ்வாரும் பார்விசையற்கேசொல்லும்
ஆனால்போய்வாரேனென்று அப்போதிரும்பிவந்து
மாயவரைக்கண்டு வணங்கிநமஸ்கரித்து
ஆதிசிவனருகில் அபயமிட்டுவேடுகையில்
ஆதரிக்கமாட்டோமென்று அவருமவிலக்கிவிட்டார்
அருச்சுனனார்தன்னருகில் போனபயமிட்டு
வணங்கிநமஸ்கரித்து மாயவர்வார்த்தைசொன்னேன்
உனக்குப்பகையான உண்மையெல்லாநானுரைத்தேன்
எத்தனைசொன்னாலும் இரங்காமலருச்சுனனும்
ஆண்டவனையுன்னருகே அனுப்பினேன்சொல்லுமென்று
இவ்வார்த்தைகேட்கவுமே எம்பெருமான்கோபமாகி
ஆங்காரக்கோபமுடன் அரிராமரென்னசொல்வார்
ஐவரைக்காப்பதற்கு ஆண்டவனாய்நானிருந்து
இத்தனைநான்காத்தேன் இயலானபஞ்சவரை
எனக்குப்பகையாளி தனக்குப்பகையலவோ
ஆதரிக்கஞாயமுண்டோ அறியானேயென்சமர்த்தை
மறுக்காமலொருதரம்நீ வாள்விசையனருகிற்சென்று
நானுரைத்தவார்த்தையெல்லாம் கல்விஜயனுக்குரைத்து
மாயவற்குவேண்டாத மாபாவியானவனை
விட்டுவிட்டாலல்லாது வெகுபகையாகுமென்று
குருகுலவம்மிசத்தார் கூட்டோடொழியுமென்று
கொல்லநினைப்பார்காண் குடிகேடுவருமென்று
சொல்லிவாருமென்று சொன்னாரேமாயவனார்
அப்போதுசக்கரத் தாழ்வாருந்தானடந்தார்
காடுஞ்செடியுங் கரியமலைதான்கடந்து
அருச்சுனராசனிடை அருகேவந்துதெண்டனிட்டு
மாயவனார்சொன்னதொரு வார்த்தையொன்றுந்தப்பாமல்
காண்டீபனருச்சுனற்குக் கரியமால்சேதிசொல்லும்
உண்டானவார்த்தையெல்லாம் ஒளியாமலேயுரைத்தான்
காண்டீபனருச்சுனனும் கரியமால்சேதிசொல்லும்
வதரிவான்கெந்தருவன் ஏழையானடியேன்
வாள்விஜயனருச்சுனன்மேல் வன்பகையுந்தனுக்கேன்
ஏதுகுற்றமானாலும் எனக்காய்மனப்பொறுத்து
ஆயிரந்தெண்டன் அடிபணிந்தேனென்றுசொல்லும்
காக்கிறேனென்றுசொல்லி கைவிடஞாயமில்லை

சற்கிப்பிழிக்க அகலவில்லை நரகத்திற்போட்டாலும்
கைவிடாக்கிளைபகைவனென்று அண்ணனுக்கு நீபுரையும்
அரிபுரசாலைமட்டும் புனைமறவானருச்சுனனும்
மைவைக்கின்றகண்ணையும் மாயனுக்குநீர்தாரும்
அதிகைப்பொருவைக்கரத்தில் அருச்சுனன்செய்தொன்றும்
தாமோதரன்றனக்குச் சக்கரமேபோய்ச்சொல்லும்
சக்கரமேபோய்ச்சொல்லுஞ் சரணசரணமென்று
சொல்லித் துதித்தழுதாளே வளம்பெருமானே
சக்கரத்தாழ்வாருக்குத் தனத்தெசபன்விடைகொடுக்க
சக்கரத்தாழ்வாரும் தர்மனங்கேபோய்நடந்தார்
காடுஞ்செடியுங் கரியமலையுந்தான்கடந்து
ஆறுங்கடந்து அதிகவனங்கடந்து
மாயநதிக்கரையில் வனத்திலேயெழுந்தருளி
வாள்விசையனைச்சொன்னவொரு வார்த்தைதனையுரைக்க
ஆயர்வந்தேகேட்டு ஆங்காரக்கோபமதாய்
நுவர்பஞ்சபாண்டவருக்கு அனர்த்தம்பிறக்குமென்ன

சக்கரமே அருச்சுனன்கை மறித்து பெருமானுக்குச் சொ
ல்ல பெருமான்கோபித்து அசசாத்தகியை
அனுப்புகிறது.

கொள்ளிமலைப்பாதே அருகேசவந்திடமே
வேண்டாக்காய்கள்ளியைபார் விண்பாகைத்தொடாதேபென
அருச்சுனனருச்சொல்லி அதிவிசைபிலேபுத
சொற்தருபனருமிக்க அருட்சணையாறுத
மூருகனைப்போனதிலே உத்திரவிரணவேளரும்
சன்றயனைபேட்டு எழுந்துநடந்தாரும்
காடுஞ்செடியுங் கரியமலையுந்தான்கடந்து
அர்ச்சுனன்றானிருக்கும் ஆசனியம்போய்ச்சேர்ந்தான்
அருச்சுனனைச்சாத்தகி அடிபணிந்துகொண்டிட்டான்
பஞ்சராணைத்தகுபரத வார்த்தைசொல்லாதப்பாமல்
ஒன்றுமொழியாமல் வரைத்தவனைசாத்தகிதான்
ஆதிராயர்சேதியெல்லாம் அருச்சுனன்றான்கேட்டு
சாத்தகியைப்பார்த்து வார்த்தைநீக்கமாய்ச்சொன்னாலும்
இராகாரமாயவரும் எதிர்க்கவுந்தாமுண்டோ
ஆயன்பெருமானும் அரியபெரினஞ்சமர்த்தை
பெண்களைப்பக்கலேளா பேசுகிறதெப்பெருமார்
கைகலந்தமைப்பட்டனும் சமிவரச்சொல்லும்
மூர்வைக்கேலையிருந்த மொருக்கிதுதாமுண்டோ
மைதானவெளியிலே வரச்சொல்லுமன்னட்டபன்னா
காக்கிரீநின்றனை கைக்கட்டிப்போடுறேன்
மாயவருடைய மீப்பன்வசநவரம்சனார்
பெருமாளுடனேசப் பிரமேதேவர்வந்தாலும்

வைரவிரதிர்த்தாலும் விளைப்பேனென்றுபாராதே
போவென்றுசொன்னான் போர்விஜயன்கோபமதாய்
சாத்தகியாழ்வாரும் தானடாதார்பொட்டெனவே
ஆயருமில்லைக்கு அடிபணிந்துதெண்டனிட்டான்
அருச்சுனன்சமர்த்தனும் அடிபணிந்துதெண்டனிட்டான்
சண்டைக்குறமன்போய் தான்வரச்சொன்னதுவும்
அவ்வார்த்தைசொல்லுகையில் ஆயருங்கோபமுற்று
அல்லலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரி ஆகுதுபார்

அருச்சுனன்மேல் பெருமான்கோபமாகி சண்டைக்குப்
போக திரியோதிரனை வரவழைக்கிறது.

கோபம்பெரிதாச்சு கோபாலநாதருக்கு
சாத்தகியைத்தானழைத்து சாமியாரேதுசொல்வார்
திரியோதிரனுக்குச் சேதியுரையுமென்றார்
மாயவருக்குப்பகையானார் மன்னர்பஞ்சபாண்டவர்கள்
ஐவரைக்கொல்லவென்று ஆயர்பயணமிட்டார்
உன்னுடையசேனைகளும் யுத்தமானராசர்களும்
சேரத்துணையாகச் செப்பிவரச்சொன்னார்
வாருமென்று வரவழையுந்திரியனைத்தான்
இப்போசமயம் இதோபயணமாகுமென்று
நாகக்கொடிவேந்தன் ராசாவையழையுமென்றார்
சாத்தகியாழ்வாரும் சரணமிட்டுப்போய்நடந்தார்
அஸ்தினாபுரத்தாரு அடைவுடனேபோய்ச்சேர்ந்து
திரியோதிரனுக்குச் சேதிகள்சொல்லலுற்றார்
ஐவரைக்கொல்லுகைக்கு ஆயர்மனதாகி
அழைக்கவரச்சொன்னார்காண் அரவக்கொடியோனே
வருவீராவென்றுசொல்லி வாய்மொழிகேட்கலுற்றார்
சாத்தகிசொல்லலுமே சர்ப்பக்கொடியோனும்
திரியோதிரன்கேட்டு சிந்தைமனங்குளிர்ந்து
ஐவரைக்கொல்லுகைக்கு அதிகமனதாகி
நல்லசமயம் நமக்குக்கிடைத்ததென்று

திரியோதிரன் பெருமானிடம்வருகிறது.

அங்கேகொட்டான்சண்டாவை அடியுமென்றான்பேரிகையை
இன்றுவெளிகூடாரம் இப்போதம்போடுமென்றான்
கானுக்கடுத்தார்கள் கருப்புநல்லகூடாரம்
வெயிலுக்குப்பிடித்தார்கள் வெள்ளைநல்லகூடாரம்
யானையின்மேல்டங்காவும் குதிரையின்மேல்டாரவும்
ஒட்டையின்மேல்நகபத்தா ஓசைசெய்திடவே
யானைச்சேனையுடன் அரசமன்னர்பயணமிட்டார்
திரியோதிரனுடப்பிறப்புகள் தொண்ணூற்றொன்பதுபேர்
கருணன்சகுனியும் காந்தாரிசேனைகளும்
துரோணரசுவத்தாமன் சோமப்பிரயாகையரும்

கிருபன்கிருபாசாரி கீர்த்திபுன்னாமன்னர்களும்
பின்னையவர்கள்துணையும் பேர்பெருந்தமந்திரியும்
மற்றுமுள்ளராசர்களும் மந்திரிபயணமானார்
அமரதருஞ்சமரதரும் அதிரதரானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியரானவரும்
சமுத்திரவர்க்கனும் இலாடச்சோனகரும்
எண்ணூற்றுக்குதிரைகள் படைத்தலைவிற்கட்டினார்கள்
காலுயன்கந்தநாட்ட ராசாக்கள்சேனையுடன்
கார்மேகம்போலே கறுத்தானைகூட்டம்வரும்
மேகத்திரளைப்போல் வெள்ளானைக்கூட்டம்வரும்
வானத்திரளைப்போல் மணித்தேரசைந்துவர
செவ்வானம்போலே சிவந்தபுரவிகளும்
அரசர்குழுபோன்ற யானைசெறிந்தேரசைய
வல்லவில்வீரர்பொன்ன பதாதிகோஷமிட
குதிரைகட்குதிக்கவே கொக்கரிக்கும்பாளயங்கள்
செம்பொழும்புருது திவாகரனைக்கப்புருது
கருந்தாழெழும்புருக கதிரோனைக்கப்புருது
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைநகரடிபடுது
ரணங்கள்ரணக்கொன்று ரணபேரிதான்முழங்க
தேர்களசைந்துவர கொடிபறக்க
மாபவனுடனேமே வாரார்களெல்லோரும்
அங்கேகட்டாண்டவை அங்கிறக்கப்பாளயங்கள்
திரியோதனராசன் ஸ்ரீகிருஷ்ணனருகில்வந்து
மாயவரைக்கண்டு வணங்கியேதெண்டனிட்டான்
ஏழுலகையாண்டசாமி யப்பெருமானோடுசொல்வார்
மாநாகங்கொண்ட மகாராசாநீர்கேளும்
காலையில்தரையெழுந்து கனிவாய்முகங்கழுவி
திணைவேந்தெரத்தரித்து செய்நிதன்ஜெபதபங்கள்
ஆரமணிதரிச்சே அரும்பாவிசெத்தருவன்
வாசங்கள்நின்றுபொற்தன் வனுதனையில்தாறுமிழ்ந்தான்
அவளைக்கழுத்தறுக்க அனுப்பினேன்சக்கரத்தை
அபயமபயமென்று அழுதுபலம்புகையில்
அருச்சுனராசனவன் ஆதரித்துக்கொண்டானும்
ஆனயவனருச்சுனனை அதமாக்கவேணுமென்றான்
உத்தமனுக்குச்சொல்லி உரகதனேவாருமென்றேன்
என்வார்த்தைதள்ளாமல் என்மேல்தயவாகவந்தீர்

துவாரைக்கொல்லதிரியோதிரனும் அவன்சேனைகளும் நம் பெருமாளும் அவர்சேனைகளும் சண்டைக்குவருகிறது.

துவாரைகொன்றதற்கு அனைவோரும்போவோமென்றார்
பயணம்பயணமென்று பயணபேரியடியென்றார்
அமரதருஞ்சமரதரும் அதிரதரானவரும்

கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடியரானவரும்
ஈழத்துவங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
அத்தண்டராஜுவும் அல்லவரும்பயணமென்றார்
துரோணாசுவத்தாமர் சொல்லரியவீரர்களும்
கிருபன்கிருபாசாரி கீர்த்திபெற்றகர்னனும்மே
எண்ணான்குஆயுதங்கள் எடுத்தரையிற்கட்டினார்கள்
ஏறினார்தேர்மேலே எடுத்தார்கொடுங்குடையை
தோரணியுமாவணியும் சேனைத்திரளுடனே
வாரஜெனங்களெல்லா மட்டுமிதங்களில்லை
காடுஞ்செடிதாண்டி கரியமலைதான்தாண்டி
வனமாய்வனங்கடந்து வருகுதுபாளையங்கள்
தினகரன்வனந்தனிலே சேர்ந்தார்துரைகளெல்லாம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
முருக்கமகாரிஷிவனத்தில் முடிமன்னர்வந்தார்கள்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
காளமகாரிஷிவனத்தில் கடுகிவந்தாரந்நேரம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
காமதேனுபர்வதத்தில் கடுகிவந்தார்துரைகளெல்லாம்
அன்றுமுகாமங்கிருந்து அப்பால்நடக்கலுற்றார்
கெந்தர்வபர்வதமே கிட்டியேவாறார்கள்
